# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2019

| தரம் : 09 | சைவநெறி<br>சுட்டெண் : ................................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I

✧ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. அன்றாட வாழ்க்கையில் நாம் எந்தச் செயலைத் தொடங்கும் போதும் முதலில் வணங்குவது
1) விநாயகர் 2) சிவன் 3) முருகன் 4) வைரவர்

02. சைவத்தின் வளர்ச்சிக்காக குலச்சிறையாருடன் இணைந்து பணியாற்றியவர்
1) திலகவதியார் 2) இசைஞானியார்
3) மங்கையற்கரசியர் 4) காரைக்கால் அம்மையார்

03. உடம்பால் இறைவன்பால் செய்யப்படும் தொண்டுகள் யாவும்
1) யோகநெறி 2) கிரியைநெறி 3) ஞானநெறி 4) சரியைநெறி

04. அட்டயோகங்களில் ஒன்றாகிய தீயவற்றை விலக்கல் என்பது
1) நியமம் 2) இயமம் 3) ஆசனம் 4) தியானம்

05. சூரனை வதம் செய்யமுன் முருகன் வீரவாகு தேவருடன் தங்கிய இடம்
1) சுவாமிமலை 2) கதிர்காமம் 3) திருச்செந்தூர் 4) பழனி

06. கிரியை நெறி நின்று முத்தியடைந்தவர்களில் ஒருவர்
1) சண்டேஸ்வர நாயனார் 2) திருநாவுக்கரச நாயனார்
3) சுந்தரமூர்த்தி நாயனார் 4) மாணிக்கவாசக சுவாமிகள்

07. கடகசங்கிராந்தி என அழைக்கப்படும் பண்டிகை யாது?
1) தைப்பொங்கல் 2) ஆடிப்பிறப்பு
3) ஓணம் பண்டிகை 4) புதுவருடப்பிறப்பு

08. பதினொரு ஆழ்வார்களின் உடலின் உள்நின்று இயக்கும் உயிராகக் கருதப்படுபவர்
1) நம்மாழ்வார் 2) மதுரகவி ஆழ்வார்
3) ஆண்டாள் 4) பெரியாழ்வார்

09. பஞ்சாங்கம் குறிப்பிடும் நட்சத்திரங்களில் பூரம் இடம்பெறுவது.
1) எட்டாவது 2) ஏழாவது 3) பதினோராவது 4) ஆறாவது

10. தசரா என்ற பெயரால் அழைக்கப்படும் விரதம்
1) சிவராத்திரி 2) ஆடிப்பூரம்
3) கேதாரகௌரி விரதம் 4) நவராத்தரி விரதம்

Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

11. கஞ்சித் தொட்டித் தருமம் செய்தவர்
   1) சுவாமி விபுலானந்தர்   2) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
   3) சேர்.பொன்இராமநாதன்   4) சுவாமி விபுலானந்தர்

12. இறைவனைத் தோழனாகக் கொண்டு ஒழுகும் நெறி
   1) சரியை   2) கிரியை   3) யோகம்   4) ஞானம்

13. சைவசமயத்தை முழுமையாக அறிந்து கொள்ளத்தக்கவகையில் அமைந்த ஒரு நூல்
   1) மெய்ஞான தீபம்   2) சைவசமயசிந்தாமணி
   3) சைவசமய இளைஞர் போதினி   4) சைவசமய ஆரம்பபோதினி

14. படிக்காசு பெற்று பஞ்சம் போக்கிய நாயன்மார்கள்
   1) சம்பந்தரும் அப்பரும்   2) சுந்தரரும் அப்பரும்
   3) மாணிக்கவாசகரும் அப்பரும்   4) சம்பந்தரும் சுந்தரரும்

15. "யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி" எனக் கூறியவர்
   1) சம்பந்தர்   2) திருமூலர்   3) திருநாவுக்கரசர்   4) சுந்தரர்

16. "சித்தாந்த சிகாமணி" என்ற பட்டத்தைப் பெற்றவர்
   1) அருணாசலதேசிகர்   2) ஆறுமுகநாவலர்
   3) விபுலானந்தர்   4) இராமகிருஷ்ணபரமகம்சர்

17. செங்கணானும் பிரமனும் எனத் தொடங்கும் தேவாரத்தினைப் பாடியவர்
   1) ஞானசம்பந்தர்   2) நாவுக்கரசர்   3) சுந்தரர்   4) மாணிக்கவாசகர்

18. மங்கையற்கரசியார் முத்தி அடைந்த தினம்
   1) தை மாத பூசம்   2) சித்திரை மாத ரோகிணி
   3) ஆடிப்பூரம்   4) சித்திரை மாத சதயம்

19. வீட்டில் காலை மாலை விளக்கேற்றும் போது பாடப்படும் தேவாரம்
   1) "காப்பதோர் வில்லும்...."   2) "துஞ்சலும் துஞ்சலிலாத......"
   3) "இல்லக விளக்கது........."   4) "காதலாகிக் கசிந்து.........."

20. திருப்பாவை பாடிய ஆழ்வார்
   1) பெரியாழ்வார்   2) நம்மாழ்வார்   3)ஆண்டாள்   4) மதுரகவியாழ்வார்

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

✧ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**01. பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டினைப் பிழையின்றி வரிக்கிரமமாக எழுதிப் பாடியவர் பெயர் தலம் என்பவற்றை எழுதுக.**

1) "காதலாகிக் கசிந்து கண்ணீர்.........."
2) "மற்றுப்பற்று எனக்கு.........."
3) "நையாத மனத்தினனை.........."
4) "சொல்லாண்ட் சுருதிப்பொருளே.........."
5) "இல்லக விளக்கது................"

(2 x 6 = 12 புள்ளிகள்)


kalvi.lk

02. “விரதங்கள் என்பது இறைவனை மெய்யன்போடு வழிபடும் முறைகள்”
1) விரதம் என்பதற்கு நாவலர் கூறும் வரைவிலக்கணம் யாது?
2) சிவனுக்கும் திருமாலுக்கும் உரிய சிறப்பான நட்சத்திர விரதங்கள் எவை?
3) விநாயகப் பெருமான் உதித்த தினத்திற்குரிய சிறப்பான விரதம் எது?
4) கேதாரகௌரி விரதம் அனுஸ்டிப்பதன் நோக்கம் யாது?

(4 x 3 = 12 புள்ளிகள்)

03. “ஆழ்வார்களால் அருளப்பட்ட திருப்பாடல்களே நாலாயிரம் திவ்விய பிரபந்தம்”
1) முதலாழ்வார்கள் எனக் குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?
2) நாலாயிரம் திவ்வியபிரபந்தங்களை அருளியோர் எண்ணிக்கை யாது?
3) நாலாயிரம் திவ்விய பிரபந்தங்களிற்கு வழங்கப்படும் வேறுபெயர் தருக.
4) சூடிக் கொடுத்த சுடர்க்கொடி எனப் போற்றப்படுபவர் யார்?

(4 x 3 = 12 புள்ளிகள்)

04. ‘திருவருட் சிறப்புமிக்க திருத்தலங்களைத் தரிசிப்பதற்காக மேற்கொள்ளப்படும் புனித பயணம் தலயாத்திரை’
1) இந்தியாவில் தலயாத்திரைக்கு சிறப்புமிக்க தலங்கள் 4 தருக.
2) கதிர்காமம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது. அதன் தீர்த்தம் யாது?
3) கதிர்காமத்திற்கான பாதயாத்திரை எங்கிருந்து ஆரம்பமாகின்றது?
4) கதிர்காம பாதயாத்திரை மேற்கொண்ட ஈழத்துச் சித்தர்கள் யாவர்?

(4 x 3 = 12 புள்ளிகள்)

05. ‘இறைபுகழ் பாடும் பாடல்களே பன்னிரு திருமுறைகள் ஆகும்’
1) திருச்சதகம் இடம்பெறும் திருமுறை யாது? அதனைப் பாடியவர் யார்?
2) நையாத மனத்தினை எனத் தொடங்கும் திருவிசைப்பா பாடியவர் பெயர் தருக.
3) சிதம்பரத்தில் ஒலித்த அசரீரி யாது?
4) காப்பதோர் வில்லும் அம்பும்.... எனத் தொடங்கும் தேவாரத்தில் குறிப்பிடப்படும் நாயனார் யார்?

(4 x 3 = 12 புள்ளிகள்)

06. ‘சைவநாற்பாதங்களே முத்திக்குரிய சாதனம் ஆகும்’
1) சரியைத் தொண்டுகள் நான்கு எழுதுக.
2) தாசமார்க்கம் என்றால் என்ன?
3) அட்ட யோகங்கள் நான்கு தருக.
4) கிரியை நெறி நின்று முத்தியடைந்த நாயன்மார் இருவரின் பெயர் தருக.

(4 x 3 = 12 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றில் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
1) விருந்தோம்பல்
2) பஞ்சாங்கம்
3) சகிப்புத்தன்மை
4) மங்கையர்க்கரசியார்
5) ஆடிப்பிறப்பு

(12 புள்ளிகள்)


kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

*May*

## ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

# 2ம் தவணை வகுப்புகள்

## தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**